[31st October 1962

Palacode Block (Salem district)

* 1010-S Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to bifurcate Palacode Block in Salem district; and

(b) if so, when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes, Sir.

(b) The proposal has been deferred for the present.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: இந்த ப்ரபோஸலை "டெபர்" செய்ததற்கான காரணத்தை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சட்டமன்றத் தொகுதிகள் எவ்வாறு மாற்றியமைக்கப்படுகின்றனவோ, அதற்கேற்றவாறு இந்த வட்டாரங்களை மாற்றியமைக்கலாம் என்ற யோசனை இருப்பதால் பின்னால் சட்டமன்றத் தொகுதிகளை மாற்றும்போது இதையும் எடுத்துக் கொள்ளலாம் என்றுதான் இது தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

* 1010-T Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to construct a Block Development Office at Palacode and also quarters for the staff, in 1962–63; and

(b) if so, the estimate, therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) There is a proposal to construct the office building. But there is at present no proposal to construct staff quarters.

(b) The estimated cost of construction of office building is stated to be Rs. 65,000.

கூட்டுப் பட்டாக்கள்

* *1010-யு* **கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர்:** கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1961-62-ல் செஞ்சி தாலூகாவில் எத்தனை கூட்டுப் பட்டாதார்களுக்குத் தனிப்பட்டா பிரித்துக்கொடுக்கப்பட்டன?

கனம் திரு. வெ. ராமையா: இருபது தனிப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டன.

* *1010-வி.* **கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லா பட்டாதார்களிடமிருந்து தங்களுடைய நிலங்களை தனிப்பட்டாக்களாக மாற்றக்கோரி நீலகிரி ஜில்லா கலெக்டர் அவர்களுக்குக் கொடுத்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை என்ன?